Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC. 8 /2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW 4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | |
|---|---|
| Name | – ஏசுபாலன்சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name | –அமிர்தம் |
| Village | -- |
| Taluk | -- |
| Caste | -- |
| Calling | -- |
| Religion | -- |
| Age | -- |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th July 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 absent. 317 Petition filed and allowed.. A2 absent. A3 to A6 absent. 317 Petition filed and allowed.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது மேட்டுப்பாளையம் காவல்நிலையத்தில் தற்போது சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.08.2013 ம் தேதி நான் மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் இரவுரோந்து பணியில் இருந்த போது மகாலிங்கபுரம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் அவரும் மகாலிங்கபுரம் காவல் நிலைய இரவு ரோந்து பணியில் இருந்தவர் என்னை வாக்கிடாக்கியில் அழைத்து மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் வாகனத்தணிக்கை அலுவலுக்கு சுமார் 3 மணியளவில் கோவை ரோடு நல்லப்பா தியேட்டர் ஜங்ஷன் வரும்படி அழைத்தார்.

2. நான் நல்லப்பா தியேட்டர் ஜங்ஷன் வந்தபோது அங்கு காவல் ஆய்வாளர் திரு, சுப்பிரமணி, உதவி ஆய்வாளர் திருமதி. தௌலத்நிஷா சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷணன் தி'ரு,மாசிலாமணி மற்றும் திரு.சம்பத்குமார், திரு. சுந்தர்ராஜன் , காவலர் திரு. கார்த்திக், திரு. ரவி மற்றும் திரு. வெங்கடாசலம் ஆகியோர்கள் இருந்தனர். அவர்களுடன் நானும்வாகன தணிக்கை அலுவலில் இருந்தேன்.

3. சுமார் 4 மணி அளவில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி டாரஸ் லாரி AB 26 X 6829 என்ற லாரியை நிறுத்தி டிரைவர், கிளினரை கீழே இறங்க சொல்லி வாகனத்தை சோதனை செய்த போது டிரைவரும் கிளினரும் தப்பி ஓடிவிட்டனர். வாகனத்தைசோதனை செய்த போது வாகனத்தில் மரங்கள், இருந்தது. அதன் எடை சுமார் 6 ½ டன் இருக்கும் என்று ஆய்வாளர் கூறினார். ஆய்வாளர் வாகனத்தை மகாலிங்கபுரம் காவல்நிலையத்திற்கு எடுத்துச்சென்று அங்கு நிறுத்திவிட்டு வருகிறேன் என்று சொல்லி எங்களை தப்பி ஓடிய எதிரிகள் டிரைவர், கிளினர் இருவரையும் தேடி கண்டுபிடிக்கச்சொல்லி கூறி சென்று விட்டார்.

4. உடனிருந்த காவலர்களுடம் ஆளுக்கொரு பக்கம் தப்பி ஓடியவரை தேடிவிட்டு கிடைக்காததால் அறிக்கை செய்து கொண்டார். இந்நிலையில் எதிரிகளை தேடி தனிப்படை அமைத்து தேடிக்கொண்டிருந்த போது 21.08.2013 ம்தேதி காலை 8 மணி யளவில் கோவை ரோடு வடக்கிருந்து தெற்காக வந்த KL 41 B 2929 என்ற Innovo Car ஐ நிறுத்தி சோதனை செய்த போது அதில் டிரைவருடம் 5 பேர் இருந்தார்கள். காவல் ஆய்வாளர் அவர்களை விசாரித்த போது ஓட்டிவந்தவர் பெயர் ரவி என்றும், 19.08.2013 ம் தேதி காலை சுமார் 4 மணியளவில் இதே இடத்தில் லாரியில்வந்த போது உங்களுக்கு பயந்து லாரியை நிறுத்திவிட்டு நானும் கிளினரும் ஓடிவிட்டோம் என்றும், லாரியை ஒட்டிவந்தது நான்தான் என் பெயர் ரவி என்றும் என்னுடன் வந்தவர் கிளினர் பாஸ்கர் என்றும் கூறினார்,. மற்றவர்கள் ரூட் பார்ப்பதற்காக வந்தவர்கள் என்றும், கூறியவரை மகாலிங்கபுரம் காவல்நிலையம் அழைத்துச்சென்று காவல் ஆய்வாளர் தனித்தனியாக ஒவ்வொருவரையும் விசாரித்தபோது கோவை ரோட்டில் AST குடோனில் லாரியில் உள்ளது போல் அங்கும் மரங்கள்

வைத்துள்ளோம் அவை செம்மரக்கட்டைகள் என்று கூறினார்.

5. AST குடோன் உரிமையாளர் ராம்குமாருக்கு சொந்தமானது என்று கூறினார்., காவல் ஆய்வாளர் மேற்கண்ட விவரங்களை உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லியும் வனச்சரக அலுவலர் அவர்களுக்கும் தனி அறிக்கையுடன் சமர்ப்பித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த சமயத்தில் மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தேன். என்னுடைய காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கூறியதின் அடிப்படையில் நான் சென்றேன்.

2. அவர் அழைத்த போது நான் இரவு நேர ரோந்து பணியில் இருந்தேன் எந்த இடத்தில் இருந்தேன் என்று தற்போது நினைவில்லை. லாரியை பிடித்து வைத்திருப்பதாக தகவல் கூறினார்கள் என்றால் இல்லை.

3. நான் சம்பவம் இடம் செல்லும்போது அதிகாலை 3.15 மணி இருக்கும். நான் சம்பவ இடம் செல்லும்போது காவல்துறையை சேர்ந்த 10 நபர்கள் அங்கு இருந்தார்கள். லாரி காலை சுமார் 4 மணியளவில் லாரி சம்பவ இடத்திற்கு வந்தது. சம்பவம் இடம் என்பது நல்லப்பா தியேட்டர் ஜங்சன்.

4.லாரியை நிறுத்திய பின்பு ஓட்டுநரையும் கிளினரையும் ஆய்வாளர் கீழே இறங்க சொன்னார் என்றால் சரிதான். பின்னர் லாரியின் டிரைவர் மற்றும்கிளினர் இறங்கி ய பின்பு லாரியின் தார்பாயை நீக்க கேட்ட போது இருவரும் தப்பி ஓடிவிட்டார்கள்.

5. மேற்படி இருவரும் எந்த திசையில் ஓடினார்கள் என்று தற்போது நினைவில்லை. தப்பி ஓடிய நபர்களை துரத்தி பிடிக்க முயற்சி செய்தோமா என்றால் தற்போது நினைவில்லை.

6. லாரியின் தார்பாயை காவலர் நீக்கி பார்த்தார்கள் என்றால் சரிதான். லாரியை அங்கிருந்து மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு காவல் ஆய்வாளர் சொல்ல யாரோ ஒருவர் ஓட்டிச்சென்றார் யார் என்று தெரியவில்லை என்றால் சரிதான்.

7.லாரியுடன் நீங்களும்காவல்நிலையம் சென்றீர்களா என்றால் இல்லை நான் தப்பிச்சென்றவர்களை தேடிச்சென்றோம் என்றால் சரிதான். அதன் பின்னர் கட்டையுடன் சென்ற லாரி எங்கு யாருடைய காவலில்நிறுத்திவைக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில்ஆய்வாளர் லாரியை நிறுத்திவிட்டு சென்றதாக பாரா காவலர் என்னிடம் தெரிவித்தார்,

8. 21.08.2013 ம்தேதி காலை 8 மணியளவில் சம்பவம் நடைபெற்ற அதே நல்லப்பா ஜங்சனில் காவல் ஆய்வாளர் திரு. சுப்பிரமணி, உள்ளிட்ட 6 முதல் 7 பேர் காவலர்கள் வாகன தணிக்கையில் இருந்தனர்.

9. பகல் ரோந்து பணிக்கு ஒரு உதவி ஆய்வாளரை நியமிப்பார்கள் இரவு நேர ரோந்து

பணிக்கு ஒரே ஒரு காவல் ஆய்வாளர் நியமிக்கப்படுவார். சம்பவம் நடைபெற்ற நல்லப்பா ஜங்சன் மகாலிங்கபுரம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டது.

10. ஆய்வாளர் சுப்பிரமணியன் பொள்ளாச்சி மேற்கு காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். 21.08.2013 ம் தேதியில் நல்லப்பா ஜங்சன் பகுதியில் ஆய்வாளர் சுப்பிரமணியம் எந்த ஒரு வாகனத்தணிக்கை செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் ஆய்வாளராக இருந்த மேற்கு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டு இருந்ததால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. உட்கோட்ட துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் தான் சிறப்புபடை அமைக்கப்பட்டது. அதில் நானும் ஒருவர். எதிரிகள்சொல்லித்தான் லாரியை ஓட்டிவந்த விபரம் எனக்குதெரியும்என்றால் சரிதான்.

12. AST குடோனுக்கு நாங்கள் விசாரணைக்கு சென்றோமா என்றால் நினைவில்லை. எதிரிகளை மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று பின்னர் வனத்துறையிடம் ஒப்படைத்தோம்,. காவல் ஆய்வாளர் என்னிடம் 6 ½ டன் எடை கொண்ட மரம் இருப்பதாக கூறினார் என்றால் சரிதான்.

13. எதிரிகளை ஒப்படைத்த பின்பு வனத்துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் நினைவில்லை. பிடிபட்ட லாரி மற்றும் கட்டைகளை வனத்துறையினரிடம் ஒப்படைத்ததோமா என்றால் எனக்கு நினைவில்லை. 19.08.2013 ம் தேதி சுமார் காலை 4 மணியளவில் லாரியை பிடித்து சோதனை மேற்கொண்டோம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

14. எதிரிகள் தப்பித்து ஓடியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 2 நாட்கள் கழித்து சம்பவம் நடந்த இடத்தில் Innova Car ஐ பறிமுதல் செய்தோம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

15. 19.08.2013 மற்றும் 21.08.2013 ஆகி ய தேதிகளில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் நான் இல்லை என்றால்சரியல்ல. மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.08.2013 ம் தேதி நான் சொன்ன இடத்தில் எதிரிகளை பிடிக்க வில்லை என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 3 முதல் 6 வரையிலான எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை.** இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Prakasam)
Judicial Magistrate No. II,
Pollachi.